aanmeegamalar.com
e-magazine www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

# மானாமதுரை சித்திரைத் திருவிழா சிறப்புமலர்






வளம்தரும் வைகையில்
எழுந்தருளும்
வீர அழகரே வருக!
வரம் தருக!!

மானா மதுரை சித்திரைத் திருவிழாவிற்கு வரும்
பக்த கோடி பெருமக்களே வருக! வருக!!
என்றும் இறைபணியில்...



மானாமதுரை ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மன் சோமநாதர்
சித்திரை திருவிழா 2026

43 ஆண்டுகளக மக்கள் சேவையில்...



S.பாலகுருசாமி ஸ்டோர்
பழைய பேருந்து நிலையம், OVC பள்ளி அருகில்,
மானாமதுரை. போன் : 04574 268218.

நியூ பாலகுருசாமி ஸ்டோர்
BSNL ஆபீஸ் எதிர்புறம், சாஸ்தாநகர், மானாமதுரை.
செல் : 93601 20163.

பாலகுருசாமி சூப்பர் மார்க்கெட்
புதிய பேருந்து நிலையம் அருகில், கீழமேல்குடி ரோடு.
மானாமதுரை. போன் : 04574 258218.

பாலகுருசாமி பழங்கள் & காய்கறிகள் மார்க்கெட்
பழைய பேருந்து நிலையம், OVC பள்ளி எதிரில், மானாமதுரை.
செல் : 72004 79118.

# ஆனந்தமான வாழ்க்கையைத் தரும் ஆனந்தவல்லி அம்மன் சோமநாதர் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானா மதுரையில் வைகை ஆற்றுக்கரை யில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக்கோயில் உள்ளது இக் கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்த வல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.

பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின் வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக் காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.



ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்பு லிங்கமாக உள்ள சோம நாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம்மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெரூர் மற்றும் ஓம் கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜூவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது.

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப் படுகிறது. மானாமதுரையில்ஆண்டு தோறும் வைகாசி மாதத் தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர் களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந் திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல் கின்றனர்.

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்பு களுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயன ளிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.



பாஞ்சால மன்னர்ஸ்தூல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள் ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டிய தாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளிதெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவ தலமாக உள்ளது.

ஆண்டு தோறும்மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் எப்படி திருவிழா நடைபெறு கிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக் கள் நடைபெறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திரபகவான் குணமடைந்தாலும் அகத்தி யர் மாணிக்கவாசகர்போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந் தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜூவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல் கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ் சாலையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.



உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# ராமன் உபதேசம் செய்த வானவர் போற்றும்

# மானாமதுரை சித்திரை திருவிழா

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீ ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவில், கிழக்கு பகுதியில் வீர அழகர் கோவில் உள்ளது. பல் வேறு சிறப்புகள் கொண்ட ஆனந்த வல்லி சோமநாதரை வழிபாடு செய்து

இந்திரன் தொழுநோய் குணமாககிய ஸ்தலம் ஆகும். ராமபிரான் வன வாசம் சென்ற போது இங்கு வழிபாடு செய்து உள் ளார். இக்கோவிலில் ஸத் குரு சதாசிவ ப்ரம்மேந் திராள் ஜீவசமாதி பீடம் உள்ளது. கங்கையை

போல் இங்கு உள்ள வைகை நதி வடக்கு தெற்காக பாய்வது சிறப்பாக கருதப்படுகிறது. இங்கு உள்ள வீர அழகர் கோவிலில் ராமர் மகுடம் சூட்டியவீர ஆஞ்சநேயர் சன்னதி உள் ளது.

இங்கு மட்டுமே ஆஞ்சநேயர் மகுடத்துடன் காட்சி தருகிறார். இங்கு சித்திரை திருவிழா மதுரையில் நடைபெறுவதுபோல் வைகை ஆற்றுக்குள் 10 நாட்கள் நடைபெறும்.





இதில் ஸ்ரீ ஆனந்தவல்லி சோமநாத சுவாமி திருக்கல்யாணம், தேரோட்டம் நடைபெறும் 10 நாட்களிலும் சுவாமி உற்சவர் சர்வ அலங் காரத்தில் வைகை ஆற்று கரையில் பக்தர் களுக்கு காட்சி தருவார்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இரவில் வைகை ஆற்றில் தரிசனம் செய்வார்கள்.

விழாவின் இறுதி நாளில் ஸ்ரீசுந்தரராஜ பெரு மாள் வெண்குதிரையில் மஞ்சள்பட்டு உடுத்தி வீரஅழகராக வைகை ஆற்றில் இறங்குவார்.

இரவில் மானாமதுரை கிராமத்தார் திருவிழா வில் பவுர்ணமி நிலா சோறு சாப்பிடும் நிகழ்ச்சி நடைபெறும்.

இதில் ஏராளமானோர் குடும்பம், குடும்பமாக ஆற்றில் வந்து இரவில் பவுர்ணமி நிலவு ஒலி யில் வீரஅழகரோடு விருந்து சாப்பிட்டு சாமி தரிசனம் செய்வார்கள்.

மானாமதுரையில் ராமாயண கால சம்பவங்கள் இங்கு நடந்து உள்ளதாலும், ராமன் உபதேசம் செய்த ஊராக இருப்பதாலும் வானவர் போற்றும் மானாமதுரையாக இப்போதும் உள்ளது.



# வரம் தரும் வீர அழகர்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வீர அழகர் கோவில் உள்ளது.

வைகை ஆற்று தென்கிழக்கில் உள்ள இக்கோவிலில் ஸ்ரீசுந்தரராஜபெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு ராமபிரானால் மகுடம் சூட்டப்பட்ட வீர ஆஞ்சநேயர், தாயார்சன்னதியும் உள்ளது.

கோபுரம் முன்பு பதினெட்டுபடி கருப்பன், ராக்கச்சி அம்மன் தனிகோவில் உள்ளது.

வீரஅழகர் ஆற்றில் இறங்குவதற்கு முன்பு பூபல்லாக்கில் கள்ளழகர் திருக்கோலத்துடன் சென்று இறங்கும் முன்பு அலங்கார பிரியரான சுந்தரராஜ பெருமாளுக்கு தியாக விநோத பெருமாள் கோவிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

வெள்ளை குதிரை வாகனத்தை அலங் கரித்து வீர அழகருக்கு வெண் மஞ்சள் பட்டு உடுத்திபச்சை வஸ்திரம் சாத்தி வேல் கம்புடன் கம்பீர மாக எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார்.

ஆண்டுதோறும் நல்ல மழை பெய்து நல்ல விளைச் சலை தருவதற்கும் மக்களின் வாழ்வு மங்களகரமாக இருக்கும் வகையில் வீரஅழகர் வெண் மஞ்சள் பட்டு பச்சை வஸ்திரம் உடுத்தி வீதி உலா வந்து வெற்றி தரும் வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார் என பக்தர்களால் நம்பப்பட்டு வருகிறது.

வைகை ஆற்று கரையில் இருபுறங்களிலும் ஸ்ரீஆனந்தவல்லி சோமநாத சுவாமி கோவில் வீரஅழகர் கோவில், அப்பன் பெருமாள் கோவில் இங்கு மட்டும் உள்ளது. மானாமதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் பெரிய திருவிழாவாக சித்திரை திருவிழா மட்டுமே உள்ளது.

ஆற்றில் இறங்கிய மறுநாள் இரவு மீண்டும் ஆற்றுக்குள் நிலாசோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் வீர அழகரை தரிசித்து வீட்டில் இருந்து சமைத்து எடுத்து வரபட்ட உணவு வகைகளை பக்தர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பௌர்ணமி நிலவு ஒளியில் சாப்பிடுவார்கள். தமிழகத்தில் இங்கு மட்டும் வீர அழகருடன் பக்தர்கள் உணவு அருந்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# மகிழ்ச்சியான வாழ்வை தரும் மாசான காளிஅம்மன்

## முருகனை வணங்கி அற்புதங்கள் பெற்ற சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள் ளது. கட்டிக்குளம் ஆன்மிக புராதனமான பகுதியாக உள்ள இங்கு எப்பகுதிக்கு சென்றாலும் திரும்பிய திசை எல்லாம் கோவில் களையும் நீர்நிரம்பிய குளங்கள் காண லாம். கட்டிகுளம்

எல்லையில் அமைந்துள் ளது. வணங்கு பவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வுதரும் ஸ்ரீமாசனகாளி அம்மன் கோவில் உள்ளது.

அதை தொடர்ந்து அழகிய நாயகி அம்மன் கோவில் பழனி முருகனுக்கு தைபூசவிழா அங்கு உள்ள பெரிய நாயகி அம்மன் கோவிலில் கொடிஏற்றி திருவிழா தொடங்குவது போல் சூட்டுக்கோல் ராம லிங்கம் சுவாமி கோவிலில் பங்குனி உத்திரம் தேரோட்டம் விழா பத்துநாள் நடைபெறும்.

இங்கு பல ஆண்டுகளாக ஆறு காலபூஜை மற்றும் ஆறு நைவேத்யங்கள் படைக்க பட்டு பக்தர்களுக்கு வழங்க படுகிறது. இங்கு உள்ள கருப்ப னேந்தல் மடத்தில் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி முதல் ஜீவ ஒடுக்கம் தவசாலை உள்ளது.

இங்கு தான் சீடர்க்கு தன் உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் சூட்டுக் கோல் மாயண்டி சுவாமி காண்பித்தார். இருவரும் தண்டபாணி சுவாமி பிரதிஷ்டை செய்து பல ஆன்மிக அற்புதங்களை பெற்று உள்ளனர்.

முக்கிய நாட்களில் தண்டபாணி சுவாமி வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. தெய்வீக ஆற்றல் கிடைக்கும் இடமாக கட்டிக்குளம் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி கோவில் மற்றும் பட்டமான் இல்லம் கருப்பனேந்தல்மடம் உள்ளது. மதுரை ராமேஸ்வரம் சாலையில் முத்தனேந்தல் பஸ்நிறுத்தத்தில் இருந்து ஆட்டோவசதி உள்ளது.



# மானாமதுரையை சுற்றியுள்ள பிரசித்தி பெற்ற கோவில்கள்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்த பிரசித்தி பெற்ற கோவில்கள் உள்ளது."

மதுரை ராமேசுவரம் சாலையில் சென்றால் முதலில் வருவது மடப்புரம் அடைக்கலம் காத்த அய்யனார் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில், அஸ்தி பூவாக மாறிய திருப்புவன புஷ்பவதினஸ்வரர் கோவில், திருப்பாச் சேத்தியில் அழகிய நாயகி அம்மன் இங்கு பெருமாள் சன்னதியும் உள்ளது.

இங்கு சிவன் அம்மனுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப் பட்டு இங்கு மட்டும் துளசி பிரசாதம் வழங்கப்படுகிறது. அதை தொடர்ந்து இடைக்காட்டுரில் இடைக்காடார் சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவக்கிரக கோவில் உள்ளது.

இங்கு நவகிரக தோஷங்கள் நீங்குவ தாக நம்பப்படுகிறது. கட்டிக்குளம் கிராமத் தில் கட்டிகுளம் மாயாண்டி சுவாமிகள் சித்தர் வாழ்ந்த இடம் உள்ளது. மாயாண்டி சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகன் சன்னதி உள்ளது.

அதை தொடர்ந்து மானாமதுரையில் இந்திரனுக்கு தொழு நோயை குணமாக்கிய ஸ்ரீ ஆனந்தவல்லி சுவாமி கோவிலும் வைகை ஆற்று கரையில் ராமபிரானால் மகுடம் சூட்டப்பட்ட வீரஆஞ்ச நேயர் கோவிலும் உள்ளது.







நகரின் மத்தியில் பக்தரின் தியாகத்தை போற்றும் வகையில் தியாகவிநோத பெருமாள் கோவில் உள்ளது. இங்கிருந்து தான் வீர அழகர் வைகை ஆற்றில் இறங்க வெள்ளை குதிரை வாகனத்தில் வேல் கம்புடன் எழுந்தருளுவார்.

மானாமதுரையில் இருந்து 3 கிலோமீட்டர் தூரம் உள்ள பஞ்ச பூதேஸ்வரம் என்னுமிடத் தில் ஸ்ரீ மகா பஞ்சமுக பிரித்தியங்கிராதேவி கோவில் உள்ளது. 24 மணி நேரம் அன்ன தானம் நடைபெறும் பிரசித்தி பெற்ற கோவி லாக உள்ளது. தென் மாவட்டத்திலேயே கோவில் கீழ் இருந்து கோபுரம் கலசம் வரை முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் சிற்ப கலை கட்டிட கலைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. இங்கு அமாவாசையாகம் நடைபெறும்.

மானாமதுரையில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் இக்கோவில் வளாகத் தில் காசியில் எப்படி கோவில் உள்ளதோ அதே வடிவமைப்பில் அமைக்கப்பட்டு உள்ளது. காசியில் சிவனை தொட்டு அபிஷேகம் செய்து வழிபாடு செய்யலாம்.

காசிக்கு போக முடியாதவர்கள் இங்கு செல்லும் கோவிலாக உள்ளது.

மானாமதுரையில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரம் தாய மங்களம் முத்து மாரியம்மன் கோவில் உள்ளது.

குழந்தையாக மீனாட்சி அம்மன் இங்கு அவரித்ததால் முத்து மாரியாக மாறி தமிழகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்யும் கோவிலாக உள்ளது. கீழடியில் 18 சித்தர்கள் கோவில் உள்ளது.

# மானாமதுரை காவல் தெய்வங்கள்



சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஏராளமான கோவில்கள் உள்ளது. வைகை ஆற்றின் இருகரைகளிலும் ஸ்ரீ ஆனந்தவல்லி சோமநாதர் கிழக்கு நோக்கி மேல்கரையிலும் வீர அழகர் கோவில் ஸ்ரீ சுந்தர ராஜபெருமாள் தேவிபூதேவி தாயார் சன்னதிகளுடன் கீழ் கரையிலும் உள்ளது.காவல் தெய்வங்களாக மேல்கரையில் எல்லை பிடாரி, எல்லை நாச்சி, தெற்கு பகுதியில் உஜ்ஜயினி மாகாளி கீழ்கரையில் சோனையா, பதினெட்டாம்படி கருப்பு, பேச்சி அம்மன், மூங்கில் ஊரணியின் முனீஸ்வரன் காவல் தெய்வங்களாக உள்ளது.

மானாமதுரை நகரின் எல்லையில் மதுரைராமேசுவரம் 4 வழிசாலையில் ஆலமரவடிவில் 'சூலாயுத சொரூபமாக தர்ம முனியப்ப சுவாமி உள்ளது. இந்தியாவில் 4 வழி சாலையில் அகற்றப்படாத ஆலமரமாக இறைசக்தியாக உள்ளது. இந்த காவல் தெய்வங்களுக்கு பூஜைகள் செய்த பின்னர் தான் மானாமதுரை நகரில் அனைத்து கோவில் விழாக்களும் இன்று வரை நடைபெறுகிறது.



## திருப்பதி ஏழுமலையான் காட்சியளித்த

# அப்பன் பெருமாள் கோவில்






சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றுகரையில் உள்ள பிரசித்தி பெற்ற, சுமார் 400 ஆண்டுகள் பழமையான அப்பன் பெருமாள்கோவில் ஆகும்.

இங்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் திருப்பதி வெங்கடா ஜல பதியே நேரில் காட்சி தருவ தாக பக்த்தர்களால் நம்பப்படுகிறது. திருப்பதி ஏழுமலையானின் தீவிர பக்தர் ஒரு வருக்கு காட்சி அளித்த தலமாக கூறப்படுகிறது.

திருப்பதி வெங்கடாசல பதிக்கு அன் றாடம் சேவை செய்யும் பிராமனர்" ஒருவர் மானாமதுரை வழியே ராமேசு வரம் தீர்த்த யாத்திரைக்கு செல் லும் வழியில் வைகை ஆற்றங்கரையில் இரவு பொழுதில் தங்கி யாத்திரை தொடங் கலாம் என முடிவு செய்து ஓய்வு எடுத்தார்.

தினமும் திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கு சேவிக்கும் அடியேன் தீர்த்த யாத்திரை வந்த தால் பல நாட்களாக ஏழுமலையானை தரிசிக்க முடியவில்லைய என மனதில் நினைத்துபுலம்பிய போது உத்தம பக்தனுக்கு அருகில் பளிச்சென ஒளி வட்டம் ஏற்பட்டது. அதில் திருப்பதி வெங்கடாசலபதி சங்கு சக்கரத்துடன் விஸ்வரூபமாய் காட்சி அளித்தார்.

அப்போது பிராமணர் கண்விழித்து எழுந்து அப்பனே! பெருமாளே திருப்பதி ஏழுமலையானே



என்று சொல்லி திருவடி வணங்கி யாத்திரையாக புறப்பட்டு சென்றார்.

ராமேஸ்வரம் சென்று புனித நீராடியபின் மீண்டும் வைகை ஆற்றுகரையில் ஓய்வு எடுத்த இடத்தில் திருப்பதி பெருமாள் அருள் ஆசிவழங்கியதை மக்களிடம் திருப்பதி எழுமலையானோ இங்கு தோன்றி நமக்கு காட்சி அளித்து ஆசி வழங்கியதை மக்க ளிடம் தெரிவித்தும் சென்றனர்.

அதைத்தொடர்ந்து பிராமனார்' கூறிய இடத் தில் அப்பகுதியில். பெருமாளுக்கு கோவில்கட்டப் பட்டது. பக்தர் ஒருவர் அப்பனே பெருமாளே என்று கூறியதால் அப்பன் பெருமாள் என்ற திருநாமத் துடன் கோவில் கட்டப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணிகள் தொடங்கி கோவில் புதுபிக் கப்பட்டு கடந்த 2021 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கு நடைபெறும் சித்திரை திருவிழா வில் வீர அழகர் இரண்டு நாள் தங்கி செல்லும் நிகழ்ச்சி மற்றும் சித்திரை திருவிழா நிறைவு அப்பன்பெருமாள் கோவிலில் நடைபெற்று வருகிறது.

கோவில் தூண்களில் பல ஆண்டுகளுக்கு முன்பே பெரு மாளின் வடிவில் ஆஞ்சநேயர் இந்த ஆபூர்வ காட்சி பாது காக்கப்பட்டு வருகிறது.

ஆஞ்சநேயருக்கு தனி சன்னதி, ஹயக்ரீவர் தனி சன்னதி, வைகுண்ட வாசல் என உள்ளது.

திருமலை திருப்பதி ஏழுமலை யானை தரிசிக்க செல்ல முடியாதவர்கள் இங்கு சென்று திருப்பதி வெங்க டாஜலபதியை தரிசித்த பலனை பெறலாம் என கூறப்படுகிறது.

## மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும்

# மதுரை கள்ளழகர்

பிரசித்திபெற்ற அழகர்மலை உச்சி யில் உள்ள நூபுரகங்கை தீர்த்தம் பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இங்கு ஒரு காலத்தில் சுதபஸ் என்ற முனிவர் நூபுரகங்கை தீர்த்தத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது துர்வாச மாமுனிவர் தனது சீடர்களுடன் அங்கு நீராட வந்தார்.

ஏற்கனவே நீராடிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவர் வந்தவர்களை கவனிக்காமல் நீராடி முடித்து பின்னர் துர்வாச முனிவரை வரவேற்றார். இதனால் சினம் கொண்ட துர்வாச முனிவர், சுதபஸ் முனிவரை பார்த்து மண்டூகமாகி (தவளை) போவாயாக என்று சாபமிட்டார்.

சுதபஸ் முனிவர் தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டு சாபவிமோசனம் கேட்டார். அதற்கு துர்வாச முனிவர் சித்திரை மாதம் பவுர்ணமி நிறைநாள் (சித்ரா பவுர்ணமி) தினத்திற்கு மறுநாள் வரும் கிருஷ்ணபட்ஷபிரதமை திதியில் கள்ளழகர் சுந்தரராஜபெருமாள் உமக்கு சாபவிமோசனம் அளிப்பார் என்று கூறிவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

அதன்படி சாபத்தால் தவளையாக மாறிய சுதபஸ் முனிவர், கள்ளழகரை நினைத்து வைகை ஆற்றில் தவமிருந் தார்.

தவத்திற்கு மனமிறங்கிய அழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கி மண்டூக மகரிஷிக்கு (சுதபஸ்முனிவர்) கருட வாகனத்தில் எழுந்தருளி சாபவிமோசனம் அளித்ததாக ஸ்தல புராண வரலாறு கூறுகிறது.



aanmeegamalar.com

# வேல்கம்புடன் வந்து வெற்றி தரும் வீர அழகர் குடும்ப ஒற்றுமைக்கு நிலாச்சோறு நிகழ்ச்சி





மானாமதுரை வைகை ஆற்றில் வீரஅழகர் இறங்கும் முன்பு அலங்கார பிரியரான சுந்தரராஜ பெருமாளுக்கு தியாக விநோத பெருமாள் கோவிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

வெள்ளை குதிரை வாகனத்தை அலங்கரித்து வீர அழகருக்கு வெண் மஞ்சள் பட்டு உடுத்தி வேல் கம்புடன் கம்பீரமாக எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார்.

ஆண்டுதோறும் நல்ல மழை பெய்து நல்ல விளைச்சலை தருவதற்கும் மக்களின் வாழ்வு மங்களகரமாக இருக்கும் வகையில் வீரஅழகர் வெண் மஞ்சள் பட்டு உடுத்தி வீதி உலா வந்து வெற்றி தரும் வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார் என்று பக்தர்களால் நம்பப்பட்டு வருகிறது.

வைகை ஆற்று கரையில் இருபுறங்களிலும் ஸ்ரீஆனந்தவல்லி சோமநாத சுவாமி கோவில் வீரஅழகர் கோவில் இங்கு மட்டும் உள்ளது.

ஆற்றில் இறங்கிய மறுநாள் மானாமதுரை வைகை ஆற்றில் கிராமத்தார் மண்டகபடிநிகழ்ச்சி நடைபெறும். இதை பக்தர்கள் நிலாச்சோறு என்று அழைக்கின்றனர்.

அன்றையதினம் சித்திரை பௌர்ணமி நிலவு ஒளியியல் வீர அழகரோடு குடும்பம் குடும்பமாக ஒற்றுமையுடன் தாங்கள் கொண்டு வந்த உணவு வகைகளை சாப்பிட்டு திருவிழாவை பக்த்தர்களால் இன்றைக்கும் கொண்டிவருகின்றனர் குடும்ப ஒற்றுமைக்கு வழிகாட்டுதல் படியும் குடும்பத்தில் உள்ள அனைவரும் வீர அழகரை வழிபாடு செய்து வாழ்வில் வளம் பெற்று வருகின்றனர்.

இவ்விழா மே 2 சனிகிழமை நடைபெறுகிறது. இதில் வீர அழகர் ராஜ அலங்காரத்தில் காட்சி தருவார்.

மானாமதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் பெரிய திருவிழாவாக சித்திரை திருவிழா மட்டுமே உள்ளது.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

♦♦♦

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.






1.5.2026 சிறப்பிதழ்
உங்கள் பகுதி
கோவில் கும்பாபிஷேகம்,
விழாக்கள், போன்றவற்றை

இதுபோன்ற
சிறப்பு மலராக
வெளியிட தொடர்பு
கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும்
செய்து தருகிறோம்...!

அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203



எல்லா புகழும் இறைவனுக்கே...

சித்திரை திருவிழா
காணவரும்
அனைவரையும்
வருக வருக என
வரவேற்கிறோம்.

AnnaA Gold®
AGMARK
EDIBLE OIL

சமையல் எண்ணெய்
வகைகள் மற்றும்
பாரம்பரிய செக்கு
எண்ணெய் வகைகள்






பாத்திமா எண்டர்பிரைசஸ்
1186-பாஞ்சுபீர் ஒலியுல்லாஹ் தர்ஹா, கன்னார் தெரு,
மானாமதுரை -630606

For any queries
please call
customer care No.
+91 98420 - 85666

# அற்புதங்கள் நிகழ்த்தும் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில்






சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் வேதியேரேந்தல் அருகே வைகை ஆற்று கரையில் உள்ள ஏனாதி செங்கோட்டை கிராமத்தில் இந்துசமய அறநிலையதுறை நிர்வாகத்தில் உள்ள 21பந்தி 61 சேனை கொண்ட

அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோவில் திருப்பணிகள் செய்யப்பட்டு கடந்த 2017 ஆண்டு வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம்

நடைபெற்றது. இங்கு நடைபெறும் மாசிமாதம் பத்துநாள் நடைபெறும் மகாசிவராத்திரி விழா வெகுசிறப்பாக நடைபெறும். தமிழகத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வழிபாடு செய்வார்கள். அதை தொடர்ந்து வைகாசி வருஷாபிஷேகம்

நவராத்திரி விழா நடைபெறும். வாரத்தின் அனைத்து நாட்களிலும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜை நடைபெறுகிறது. கோவிலில் உள்ள பரம்பரை பூசாரி சண்முகசுந்தரம் சுவாமி கூறியதாவது தென்மாவட்ட ங்களில்

பிரசித்தி பெற்ற ஏனாதி செங்கோட் டைஅருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் வணங்கும் பக்தர்கள்களுக்கு வேண்டிய வரங்களை வழங்கி பக்தர்கள் வாழ்வில் பல்வேறு அற்புதங்களை நிறைவேற்றி தருவதால் தினமும் ஏராளமான பக்தர்கள் அங்காள பரமேஸ்வரி அம்மனை மனமுருகி வழிபாடு செய்து வருகின்றனர்.

# திருவாரூர் தேரை அலங்கரிக்கும் மதுரை கலையகம்







உலக புகழ் பெற்ற திருவாரூர் தேரை அலங்காரம் செய்யும் அழகிய சுவாமி படங்களுடன் கூடிய தேர் சீலைகள், வண்ணமயமான துணி தோரணங்கள், பல வண்ண கலரில் தேரை அலங்கரிக்கும் விரிப்புகள், கோவில் குடைகள், பல்லக்கு, பொம்மைகள், பன்னாங்கு போன்றவற்றை மதுரை கலையகம் அழகிய வடிவமைப்புடன் தயாரித்து வருகின்றனர்.

இது பற்றி அதன் நிறுவனர் மதுரை சுந்தர வடிவேல் கூறியதாவது உலகின் மிக பெரிய தேரான திருவாரூர் தேரை மதுரை அன்னை மீனாட்சி அம்மன் அருளால் எங்களின் மதுரை கலையகம் மூலம் தேரை அலங்கரிக்கும் விரிப்புகளை தயார் செய்து வழங்கி வருகிறோம்.

தமிழகம் மற்றும் கர்நாடகா மாநிலங்களின் நடைபெறும் தேரோட்டங்களில் மதுரை கலையகத்தால் அழகிய வடிவமைப்புடன் கூடிய வண்ண வண்ண துணிகள் மூலம் அலங்காரம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். கோவில் திருவிழா, மஹா கும்பாபிஷேகம் விழா , மற்றும் ஆன்மிக விழாக்களில் வண்ண துணி தோரணங்கள் செய்து தர அணுகவும் செல் 9842805939

# பெருமாள் இருக்கும் இடத்தில் முருகனுக்கு ஒரு படைவீடு



முருகப்பெருமானின் அறுபடை வீடு களில் முதலாவதும் ஆறாவதும் மதுரை யில் அமைந்துள்ளது. இதில் ஆறு படை வீடான பழமுதிர்ச்சோலை இருப்பது, அழகர்மலையின் உச்சியில்தான். அறுபடை வீடுகளில் திருவிளையாடல் புரிந்த முருகப்பெருமான், அவ்வையாரின் அகங்காரத்தை போக்கிய தலம் இத்தலம் என புராணக்கதைகள் கூறுகின் றன.

காட்டு வழியாக நடந்து சென்ற அவ்வையாருக்கு நாவல் மரத்தின் கிளை யில் ஆடுமேய்க்கும் சிறு வனாக அமர்ந்திருந்த முருகப்பெருமாள், சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என கேட்டு அகந்தையை போக்கியதாககூறப் படுகிறது.

இந்த திருவிளையாடல் நினைவாக சோலை மலை உச்சில் நாவல் மரத்தின் கிளை இன்றும் காணப்படுகிறது.

வள்ளியை திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகன் அழைத்ததலம் பழமுதிர்ச்சோலை என்றும் கூறப்படுகி றது. பழம் முற்றிய சோலை இது என திருமுருகாற்றுப் படையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்குள்ள முருகனுக்கு உகந்த நாளாக வெள்ளிக் கிழமை கருதப்படு கிறது.

அன்றைய தினம் முருக கடவுளுக்கு தேனும், தினை மாவும் படைக்கப் படுகிறது. இங்கு கந்த சஷ்டி விழா, தைப்பூசம், வைகாசி விசாகம், கிருத் திகை ஆகிய நாட்களில் சிறப்பு வழி பாடுகள் நடத்தப்படுகின்றன.

மாமன் அருகில் மருமகன் முரு கருக்கும் அருகே இருக்கும் ஸ்தலங்கள் மதுரை அழகர் மலையாகும்.

சிறப்பு மலர் வெளியிட தொடர்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994162182
9444228203



D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்
9842409829/9791944001
பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606



கீதா சமையல்
geetha samayal YouTube channel
ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமையல் வீடியோக்கள் உள்ளன





ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் துணை
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம்
ஏனாதி செங்கேட்டை
கிராமத்தில் அருள்பாலிக்கும்
ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன்
திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் வரவேற்கிறேன்
இவண் : தலைமை பூசாரி S.சண்முக சுந்தரம்
காவல்கார வகையறா மற்றும் ஏனாதி செங்கோட்டை கிராமப் பொதுமக்கள்

# மானாமதுரையில் கடிதம் தரும் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் சுந்தர விநாயகர் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தர புரம் தெருவில் உள்ள வன்னி மரத்தை தல விருட்சமாக உள்ள சுந்தரவிநாயகர் கோவிலில் மூல நட்சத்திரத்தன்று அனுமன் உருவப்படம் வைக்கப்பட்டு வடைமாலை சாத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

பூஜை தொடங்கும் நேரமான மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை மாணவமாணவி கள், ஆண், பெண், என ஏராளமான பக்தர்கள் கடிதம் எழுதிய கவர் தரு கின்றனர். அந்த கடிதங்களை அனுமன் உருவப்படத் திற்கு முன்பு வைத்து பூஜை செய்து அங்கே வைத்து விடுகின்றனர்.

கடிதம் கொடுத்த பக்தர்கள் அடுத்த முறை வந்து கடிதத்தில் எழுதிய கோரிக்கை நிறைவேறி விட்டது என்று கூறி பூஜை செய்கின்றனர். கோரிக்கை நிறைவேறிய கடிதங்கள் உருவப் படத்தில் இருந்து எடுக்கப்பட்டு தனி பையில் சேகரிக்கப்பட்டு கோவிலில் வைக்கப்பட்டுள் ளது.

இந்த கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, பவுர் ணமி பூஜை மூல நட்சத்திரம், மற்றும் விநாயகர் சதுர்த்தி, தமிழ் வருடப் பிறப்பு, ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, மார்கழி 30 நாள் சிறப்பு வழிபாடு உள்ளிட்ட விஷேசங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மூல நட்சத்திரத்தன்று அனுமனிடம் கடிதம் கொடுக்க ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.இங்கு நடைபெறும் வன்னி மரம் பூஜை வழிபாடு சிறப்பு ஆகும்.

மானாமதுரை பகுதியில் வன்னிமரம் தல விருட்சமாகவும் இக்கோவில் பின்புறத்தில் சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவு ஆற்றிய இடமாக கொண்ட சிறப்புகள் வாய்ந்த ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் சுமார் 26 ஆண்டுகள் கழித்து தற்போது திருப்பணிகள் செய்யப்பட்டு வரும் ஜூன் 4 ந்தேதி வியாழன் அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இது பற்றி கோவிலை பராமரித்து வரும்









முன்னாள் ராணுவ வீரர், பிரசாத், தமிழ ரசி தம்பதியினர் கூறும்போது,

மூலம் நட்சத்திரத் தன்று அனுமனுக்கு பலர் கடிதம் தருகின் றனர்.

சில நாட்களில் கோரிக்கை நிறை வேறி விட்டது என்று மகிழ்ச்சியுடன் கூறு கின்றனர்.

அனுமன் உருவப்படத்திற்கு முன்பு பூஜை செய்யப்படுகிறது.

கடிதங்கள் பிரிக்கப்படுவது கிடையாது. அனுப்புனர் கொடுக்கும் முகவரியும், பெறுநர் பகுதியில் வீர அனுமான், சுந்தரவிநாயகர் திருக் கோவில் சுந்தரபுரம் மானாமதுரை என்றுதான் கொடுப்பார்கள்.

அதில் நாங்கள் செந்தூரம் வைத்து அனுமன் உருவப் படத்திற்கு முன்வைத்து விடுவோம்.

இப்படி வேண்டுதல் மூலம் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு. திருமணம், நோய்குணமாகுதல் போன்ற பல கோரிக்கைகள் நிறைவேறியுள்ளன என கூறினர் தற்போது கோவில் கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் நடைபெற உள்ளது பக்தர்கள் நிதி உதவியாகவோ பொருளுதவி யாகவோ தரலாம். தொடர்புக்கு 94435 02417






# பக்தர்களின் மனக்குறையை போக்கும் மானாமதுரை மாரியம்மன் கோவில் கோவில்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிவகங்கை ரோட்டில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது.

இக் கோவில் மானாமதுரை பகுதி யில் பக்தர்கள் வழிபாடு செய்த முதல் மாரியப்பன் கோவிலாக உள்ளது.

இக்கோவில் சமயபுரம் மாரியம்மன் சேந்தாகுடிமழை மாரியம்மன் பிடி மண் கோவிலாகும். இக்கோவில்திருப் பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா கடந்த மார்ச் 25–ந் தேதிபுதன் கிழமை மஹா கும்பாபிஷேகம்நடைபெற் றது.

நான்கு கால யாகசாலை பூஜைகள் முடிவு பெற்று சிவாச்சாரியார்கள் யாகத்தில் வைத்து பூஜை செய்த ப கடங்களை எடுத்துக் கொண்டு கோவில் வலம் வந்து விமான கோபுரம் கலசங்களில் பூஜை செய்து புனித தீர்த்தத்தால் கும்பாபிஷேகம் செய்தனர் இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு மகா அபிஷேக, ஆராதனை, பூஜை நடை பெற்றது. தொடர்ந்து தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. முக்கிய பூஜை 48 ம் நாள் மண்டல பூஜை பூர்த்தி விழா வரும் மே 12 ந்தேதி செவ்வாய் கிழமை நடைபெறுகிறது. அன்று சிறப்பு ஹோமம் விஷேச தீபாராதனை பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாரியம்மன் கோவில் திருப்பணி வேலைகளை ஸ்தபதி பாண்டி செய்து இருந்தார்.விழா ஏற் பாடுகளை விழா கமிட்டியினர் திருக்கோவில் பரம்பரை டிரஸ்டி விஜிபோஸ் சிவக்குமார் குடும்பத்தினர் ,விழா குழுவினர் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

மானாமதுரை பகுதியில் மிகவும் பழமையான சமயபுரம் மாரியம்மன் சேந்தாகுடி மழை மாரியம்மன் பிடிமண் கோவிலாகும். இக்கோவிலில் முதலில் அம்மனின் திருக்கண் மட்டுமே

வழிபாடு நடைபெற்றது. பல நூறு ஆண்டுகள் கழித்து புகழ் பெற்ற மானாமதுரை மாரியம்மன் கோவில் அழகிய வடிவமைப்புடன் விமான கோபுரம் அமைக்க பட்டு மாரியம்மன் அழகிய திருவுருவ சிலையுடன் அமைத்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பக்தர்களின் தீராத மனக்குறைகளை தீர்க்கும் மாரியம்மனாக உள்ளது. இப்பகுதியில் உள்ள மக்கள் தினந் தோறும் மாரியம்மன் வழிபாடு செய்து அன்றாடப் பணிகளை செய்து வருகின் றனர். திருச்சி சமயபுரம் மாரியம்மன் வழிபாடு செய்த பலன் தரும்மாரியம்மன் கோவிலாக பக்தர்களால் கருத படுகிறது. இங்கு பங்குனி திருவிழா பௌர்ணமி வழிபாடு, ஆடி வெள்ளிக்கிழமை சிறப்பு பூஜைகள், மார்கழியில் அனைத்து நாட்களிலும் சிறப்பு பூஜைகள் வழிபாடு நடைபெறுகிறது. மானாமதுரை வைகை ஆற்று பாலத்தை கடந்தவுடன் இக் கோவில் உள்ளது.

ஆலய தொடர்புக்கு: பரம்பரை கோவில் டிரஸ்டி விஜிபோஸ் சிவக்குமார் 9751892422

# சகலசவுபாக்கியம் தரும் சதாசிவ பிரம்மேந்திராள்





மானாமதுரையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண்,பெண் உருவில் உள்ள ஸ்ரீ சதா சிவ பிரமேந்திராள் சன்னதி தற்போது புதிதாக முழுவதும் கருங் கற்களினால் கட்டப்பட்டு உள்ளது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் என்ற மகான் ஒரே நேரத்தில் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவில், ஓம்கார், வாரணாசி ஆகிய இடங்களில் மட்டும் ஓர் ஜோதி வடிவில் ஆனந்தவல்லி சோமநாதருடன் காட்சி அளித்ததாக கூறப்படுகிறது.

அவருடைய பூத உடல் ஜீவ சமாதி நெடூரில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் ஜோதி ரூபத்தில் காட்சி அளித்த இடத்தில் பீடம் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்பு மனமுருகி வழிபடுபவர்களுக்கு மன நிம்மதி கிடைப்பதோடு தீராத நோய்களும் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் மூன்று நாட்கள் இந்தியாவில் உள்ள அனைத்து இசை கலைஞர் களும் இசை ஆராதனை விழா நடத்துகின்றனர். புதிதாக இசை கற்பவர்கள் இங்கு வந்து வழிபட்டால் இசை பயிற்சியில் கலந்து கொண்டு ஏராளமானோர் புகழ் அடைந்து உள்ளனர்.

உலகம் முழுவதிலும் உள்ள கர்நாடக இசை வித்வான்கள் இதில் கலந்து கொண்டு இசை ஆராதனை விழா மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவிலில் நடைபெறுவது தனி சிறப்பாக உள்ளது. வரும் மே 16, 17ல் பிரம்மேந்திரர் ஆராதனை விழா நடைபெறுகிறது.



# தீராத நோய்களை குணமாக்கும் பனையப்பட்டி ஞானி புல்லான் சாது சித்தர் குருபூஜை விழா



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள பனையப்பட்டி என்ற ஊரில் அவதரித்து ஏராளமான மக்களுக்கு அவர்களின் மனக்குறையை தீர்த்தும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தீராத நோய்களையும் தனது சித்த வைத்தியத்தாலும் தவ வலிமையாலும் குணப்படுத்தி வந்தார்.

அங்குள்ள ஆயிரம் பிள்ளையார் கோவிலில் பூஜை செய்து பக்தர்களின் குறைகளை போக்கியதை அறிந்து ஏராளமானோர் பக்தர்கள் அவரை சந்தித்து ஆசி பெற்று வந்தனர் ஞானி புல்லான் சாது சித்தர் ஆயிரம் பிள்ளையார் கோவிலில் தவ அறை அமைத்து இரவு பகலாக தவம் இருந்து வந்தார்.

ஞானி புல்லான் சாது சித்தர் சித்த வைத்தியத்தை கைவந்த கலையாக உடற்கூறை அறிந்து மூலிகைகளை கொண்டும் தவம், யோகசனம் மூலமும் குணப்படுத்தி மக்களிடம் எந்த வித காணிக்கைகளும் இன்றி மக்களின் நோய்களை தீர்த்து வந்து மக்களின் அன்பிற்கு பாத்திரமானார். தவம் தரும் ஞானி புல்லான் சாதுவிற்கு ஜீவ ஒடுக்கம் மற்றும் பிராண பிரதிஷ்டை கடந்த 2012ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இவர் பூஜை செய்த ஆயிரம் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது ஞானி புல்லான் சாதுவிற்க்கு மாதந்தோரும் சிறப்பு யாகமும், பவுர்ணமி பூஜை வழிபாடும் அன்னதானமும் நடைபெற்று வருகிறது இப்போதும் ஞானி புல்லான் சாது சித்தர் ஜீவ ஒடுக்கத்தை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள்.

தங்களுக்கும் தங்களை சார்ந்தவருக்கும் ஏற்பட்ட நோய்களை குணமாக்க வேண்டியும் மனம் உருகிவேண்டிசென்று நோய்கள் குணமான உடன் ஞானி புல்லான் சாதுஜீவ ஒடுகத்திற்கு வருகைதந்து நன்றியுடன் ஏராளமான பக்தர்கள் வருவதை பனையபட்டியில் இப்போதும் காணலாம். மகான் ஞானிபுல்லான் சாது சித்தர் மஹா குருபூஜை விழா வரும் ஜூன் 6ந்தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பு ஹோமம் நடைபெறுகிறது. வைகாசி 24 ஜூன் 7 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மஹா குரு பூஜை ஆராதனை விழா நடைபெறுகிறது. இதில் நடைபெறும்.

மிக பெரிய அன்னதானத்தில் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் சுவாமியின் பிரசாதமாக ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. ஞானி புல்லான் சாது சித்தர் வாழ்ந்த காலத்தில் முக்கனிகளை நோய் தீர்க்கும் மருந்தாக பக்தர்களுக்கு தினந்தோறும் கொடுத்து வந்ததால் அவரின் அருள் ஆசியுடன் மஹா குரு பூஜை விழாவில் நடைபெறும் அன்னதானத்தில் முக்கனி கள் பக்தர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகில் பனையபட்டி ஞானிபுல்லான் சாது முதல் ஜீவ ஒடுக்கம் கோவில் உள்ளது. ஆலய தொடர்புக்கு 9443256997, 8012641818




# ஓடும் ரயிலை நிறுத்தி ஆங்கிலேய அதிகாரியை திகைக்கவைத்தவர் காசி, ராமேசுவரத்தை கையில் காண்பித்த மகான்

# கட்டிக் குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டி குளம் பகுதியில் உள்ள திருவேட்டை அய்யனார் கோவில் பூசாரியாக இருந்த குப்பமுத்து வேளார் இவருக்கு நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு

நாள் குப்பமுத்து வேளாரும் மனைவி கூத்தாயி உடன் அங்கு உள்ள ராமலிங்க சுவாமி கோவிலில் நீண்ட நாள்களாக தங்களுக்கு குழந்தை இல்லததை கூறி தங்களுக்கு தெய்வ குழந்தை வேண்டும் என்று மனமுருகி வேண்டி னார். அதன் பலனாக 1858 ஆம் ஆண்டு ஆடி மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பூசாரி குப்பமுத்து கூத்தாயி தம்பதியர்க்கு அழகிய குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு மாயாண்டி சுவாமி என பெயர் இட்டு வளர்த்தனர.

சாதாரண குழந்தையாக வளர்ந்த மாயாண்டி சுவாமி தன்னுடன் இருந்த தெய்வீக சக்தி வெளி உலகத்திற்கும் தந்தைக்கும் தெரிய ஆரம்பித்தது ஒரு நாள் குப்பமுத்து வேளார் தன் மகன் மாயாண்டி சுவாமியுடன் திருவேட்டை அய்யனார் கோவிலுக்கு பூஜை செய்த போது கோவில் முன்பு விளையாட சொல்லிவிட்டு பூஜை பணிகளை செய்து கெண்டு இருந்தார்.

அப்போது வெளியே விளையாடி கொண்டிருந்த மாயாண்டி சுவாமி கழுத்தில் நல்லபாம்பு சுற்றிக்கொண்டு இருந்தது வீதியில் சென்ற மக்கள் சிறுவன் மீது ஏறிய பாம்பை கண்டு அலரினார்கள் பூஜையை முடித்த குப்பமுத்து வேளாரும் மகன் மீது பாம்பு சுற்றியதை பார்த்து திகைத்து நின்றார் அடித்தால் கடித்து விடுமோ என்று பயந்து கூச்சல் போட்டனர் கூச்சலை கேட்டு திரும்பிய மாயாண்டி சுவாமி தன் மீது சுற்றி கொன்டிருந்த நல்லபாம்பை பார்த்து கொஞ்சம் இறங்கி போறிங்கலா நாக ராஜா என கூறிய உடன் இறங்கி அருகில் உள்ள புதரில் சென்று மறைந்தது.

பாம்பை கண்டு பயந்த தந்தையிடம் தினமும் என் நன்பன் நாகராஜனிடம் விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

இதை போல் மாயாண்டி சுவாமி தாயார் வீட்டிற்கு முன்னால் நெல்லை அவித்து காய போட்டு பின் காக்கைகள், குருவிகள் வராமல் நெல் கதிர்களை பார்த்துக் கொள்ளும் படி கூறி விட்டு குளத்திற்க்கு சென்று விட்டார்.

அப்போது எராளமான பறவைகள் தானியங்களை சாப்பிட்டு கொண்டு இருந்தது இதை மகிழ்ச்சியுடன் பறவைகளை விரட்டாமல் பார்த்து கொண்டு இருப்பதை தாய் கூத்தாயி மகனிடம் கோவம் அடைந்தார்.

உடன் மாயாண்டி சுவாமி பறவைகளை மயக்கம் அடைய செய்யவா என கேட்ட போது, மகன் அறியாமல் கேட்கிறான் என நினைத்து தாயார் சரி என்கிறார்.

உடனே தியான நிலையில் அமர்ந்து பறவைகளை பார்த்து ஏதோ கூற பறவைகள் முழுவதும் மேலிருந்து விழ ஆரம்பித்தது. பயந்த தாயார் கூத் தாயி பறவைகளை பறக்கவிடு நான் விளையாட்டாக கூறினேன். என்று கூறிய மறு நிமிடமே தாயின் கட்டளைபடி மாயாண்டி சுவாமி மயங்கிய பறவைகள் துள்ளி எழுந்து பறந்து சென்றது.

இப்போதும் கட்டிகுளம் மாயாண்டி சித்தரின் கருப்பனேந்தல் மடத்தில் கால்நடைகள் மேய்வதற்காக வயலும் தண்ணிர் தொட்டியும் உள்ளது. ஏராளமான பறவைகளும் வந்து செல்லுகின்றன. மாயாண்டி சுவாமி தினமும் மதுரை மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று ரயில் மூலம் மானா மதுரைக்கு வந்து கொண்டு இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த ஆங்கி லேய டிக்கெட் பரிசோதகர் குந்து காலிட்டு தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் தலையில் பென்சிலால் தட்டி டிக்கெட் கேட்கிறார். கண் விழித்த மாயாண்டி சுவாமி சிரித்து விட்டு மீண்டும் தியான நிலைக்கு செல்கிறார். கோபம் அடைந்த அதிகாரி உதவியாளரை அழைத்து சிறிய ரயில் நிலையத்தில் நின்ற போது இறக்கி விடப்பட்டார்.

அவர் பயணம் செய்த ரயில் புறப்படவில்லை ரயில் நிலையத்தில் உள்ள பணியாளர்களும் ஏன் என்று திகைத்து கொண்டு இருந்தனர். பிற பெட்டிகளில் இருந்த பொது மக்கள் தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் காலில் விழுந்து ஆசி பெற்று சென்றனர். அப்போது சிலர் டிக்கெட் பரிசோதகரிடம் மகா சித்தர் மாயாண்டி சுவாமி பயணம் செய்தால்தான் ரயில் புறப்படும் என தெரிவித்தனர்.

பின் டிக்கெட் பரிசோதகர் மாயாண்டி சுவாமியிடம் மன்னிப்பு கேட்டு ரயிலில் பயணம் செய்யுமாறு கேட்டு அமர்வதற்க்கு இருக்கையும் ஏற்பாடு செய்கிறார். மாயாண்டி சுவாமி அமர்ந்தவுடன் ரயில் புறப்பட்டு மானாமதுரை செல்கிறது. இதை அறிந்த மக்கள் சுவாமியை வரவேற்க திரண்டனர். அதே ரயிலில் ஆய்வு பணிக்காக ராமேஸ்வரம் வந்த ஆங்கிலேய உயர் அதிகாரி சுவாமியின் மகிமையைக் கண்டு உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்க இறைவனிடம் சரணாகதி ஆகும் என்னை போன்ற சாதுகளுக்கு இலவசமாக ரயில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து வாய் மொழி உத்தரவு பிறப்பிக் கப்பட்டது, இப்போதும் சாதாரண பெட்டிகளில் சாதுக்கள் அகோரிகள் ஓர் இடத்தில் இருந்து மற்றொறு இடம் செல்ல பயணம் செய்கின்றனர். டிக்கெட் பரிசோதகர்கள் ரயிலில் கிழே அமர்ந்து இருக்கும் காவி உடை அணிந்த முதியவர் களிடம் டிக்கெட் கேட்பதில்லை.

ஒருநாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத்தில் வசித்த பிராமணத்துக் தம்பதியினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், “உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. அதற்குச் சுப்பிர மணி என்று பெயர் வை.

ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப்பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்” என்று ஆசி வழங்கினார். அதன்படி பிறந்த சுப்பிரமணிதான் பின்னர் சுவாமிகளிடம் தீட்சை பெற்று ‘சாந்தானந்த சுவாமிகள்’ ஆனார். சேலம் புதுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள ‘ஸ்கந்தாஸ்ரமம்’ அமைத்துப் பக்தர்களின் குறைகளைத் தீர்த்து வருகிறார்.




## வேண்டிய வரங்களை தரும் ஸ்ரீ சித்தி விநாயகர், ஜெயவீர ஆஞ்சநேயர் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றுப் பாலத்தின் அருகில்




அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் அருள்மிகு ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சநேயர் திருக்கோவில் பிரசித்தி பெற்றதாகும். அரசமரம் தல விருட்சமாக கொண்ட இக்கோவிலில் மாதந்தோறும் நடைபெறும் சங்கடஹர சதுர்த்தி வழிபாடு சிறப்பு ஆகும். இதன் அருகே உள்ள வேண்டுபவர்களுக்கு வேண்டிய வரங்களை தரும் செயவீர ஆஞ்சநேயர் கோவிலில் வாரந்தோறும் நடைபெறும் ஆஞ்சநேயர்க்கு சிறப்பு திருமஞ்சனம் பூஜை வழிபாடு நடைபெறும்.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்வார்கள். மானாமதுரை பகுதியில் மக்கள் சுப நிகழ்ச்சிகளுக்கு செல்லும் போது வைகை ஆற்று பாலத்தின் முன்பு உள்ள □□ரீ சித்தி விநாயகர் மற்றும் செயவீர ஆஞ்சநேயரை மனதார வணங்கி செல்வார்கள். தற்போது கோவில் திருப்பணிகள் செய்து

மஹா கும்பாபிஷேக விழா வரும் ஜூலை 1 ந்தேதி

புதன்கிழமை அன்று காலை 09.15 மணிக்குமேல் 10.15 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

அன்று மதியம் 12.30 மணியளவில் அன்னதானம் நடைபெறுகிறது. மஹா கும்பாபிஷேகம் விழா ஏற்பாடுகளை

ராஜுபிள்ளை நிர்வாகஸ்தர், சந்திரமாறன் டிரஸ்ட்டி, முரளிதரன் அர்ச்சகர் மற்றும் விழா குழுவினர் செய்து வருகின்றனர். மானாமதுரை வைகைஆற்று பாலம் அருகில் சித்திவிநாயகர், செயவீர ஆஞ்சநேயர் கோவில் உள்ளது.

# வானரவீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்







ராமாயண காலத்தில் ராமபிரான் இலங்கை சென்று போரிட வானர படை களை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பிய போது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கி இருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உப தேசம் செய்தார்.

ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலை வணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமையுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானாமதுரை வைகைஆற்றில் கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத் தார்.

வானர படைகள் இங்கு வீரம்பெற்ற தால் வானர வீரமதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை என அழைக்கபடுகிறது. ராமர், அனுமார் பாதம் பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானர படைகள் பழங்கள் உண்டு மயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ்சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத் தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரையில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசி அனுமராகவும் பக்தர்களால் வணங்கபட்டு வருகிறது.



# எதற்காக அழகர் ஆற்றில் இறங்குகிறார்

மதுரையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில், அமைந்துள்ளது அழகர்மலை, இந்த மலையை தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு காளை வடிவத்தில் இருப்பதால் இந்த மலைக்கு 'விரிஷபாத்ரி' என்ற பெயர் உண்டு.

எமதர்மன் தனது அகந்தையால் சாபத்தைப் பெற்று அவதிபடுகிறார், தனது சாபம் தீர இந்த மலைக்கு வந்து பெருமாளை தீவிரமாக வழிபட்டுபெருமாளிடம் சாப விமோசனம் பெறுகிறார், சாபத்தின் தீவிரத்தை அனுபவித்த எமதர்மன்,பெருமாளிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார், 'தனக்கு சாப விமோசனம் கொடுத்தது போல இங்கே கோவில் கொண்டு மானிடர்களுக்கும் அருள்புரிய வேண்டும்' என்று பெருமாளிடம் வேண்டிக் கொள்கிறார். எமனின் கோரிக்கையை ஏற்று பெருமாள் இங்கு குடி கொண்டு மக்களுக்க அருள்புரிவதாக ஐதீகம்.

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாள் எந்நேரமும் பக்தரை காக்கும் விதத்தில் தயார் நிலையில் இருப்ப தாகவும் கூறப்படுகிறது, இதற்கு சான்றாக பெருமாளின்கையில் உள்ள சக்கரம் எப்போதும் புறப்படத் தயாராக இருக்கும் வகையில் மிக நேர்த்தியாக காட்சியளிக்கிறது. இதுமட்டுமின்றி சுந்தர ராஜப் பெருமாளின் கையில் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் பக்தர்களை ஷன நேரத்தில் காத்திட தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

## தேவலோக தங்க சிலைகள்

இத்தலத்தின் இன்னுமொருசிறப்பு இத்தலத்தில் வீற்றிருக்கும் உற்சவர்தான், இந்த உற்சவர் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளார், அதுவும் பூமியில் கிடைக்கும் தங் கத்தில் அல்ல, தேவலோகத்தில் கிடைக்கும் 'அபரஞ்சி' என்ற அரியவகை தங்கத்தால் செய்யப்பட்டவர் உற்சவர்.

இந்த வகை தங்கத்தால் ஆன பெருமாள் சிலை உலகில் இரண்டு மட்டுமே உள்ளது. ஒன்று திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலிலும் மற்றொன்று அழகர் மலையிலும் மட்டுமே உள்ளதாக கூறப்படுகிறது.

## அழகர் ஏன் ஆற்றில் இறங்குகிறார்?

அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் இரண்டு விதமாக கூறப்படுகிறது.

### ஒன்று...

சுதபஸ் என்ற முனிவர், நூபுர கங்கையில் தீர்த்தமாடி, பெருமாளை நோக்கித் தவ மிருந்தார். அந்தச் சமயத்தில்துர்வாச மகரிஷி, தன் பரி வாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக்கொண்டிருந்த முனிவர், ரிஷி வந்ததைக் கவனிக்காமலிருக்கவே ஆத்திரமடைந்த துர்வாசர் 'மண்டூகோ பவ' (தவளையாக போகக் கடவாய்!) என சாபமிட்டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்ட போது, 'விவேகவதி தீர்த்தக்கரையில்(வைகை) தவம் பண்ணிக்கொண்டிரு.

சித்ரா பௌர்ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார்' என சொல்லியிருக்கிறார் துர்வாசர். அதன்படி வைகைக் கரையில் தவம் செய்து கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோ சனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்து போன தாகப் புராணங்கள் விவரிக்கின்றன.

### மற்றொன்று....



பெருமாளின் சகோதரி அம்பாள், அந்தவகையில் அழகர் மீனாட்சியின் சகோதரர் என்பதால் மீனாட்சி கல்யாணத்தின் போது பெண்ணை தாரை வார்த்து கொடுக்க அழைக்கப்பட்டார், கல்யாணத்தில் கலந்து கொள்வதற்காக அழகர் மலையிலிருந்துமது ரைக்கு பயணம்செய்தார்.

அழகர் மலையில் இருந்து 20 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவை கடந்து வரும் போது வழி நெடுக மக்கள் திரண்டு நின்று அழகருக்கு வரவேற்பு கொடுக்கவே, பக்தர்களுக்காகநின்று நின்று வரும் அழகர், தல்லாகுளத்தில் வந்து தங்கினார்.

குறித்த நேரத்தில் தங்கை மீனாட்சி கல்யாண நிகழ்வில் கலந்து கொள்ள வர இயலவில்லை, மூகூர்த்த நேரம் கடந்துவிடுமோ என்ற அச்சத்தில் அழகர் இல்லாமலே தங்கை மீனாட்சியின் திருமணம் நடந்து முடிந்துவிடுகிறது. மறுநாள் வைகை ஆற்றை கடக்கும் போது திருமணம் முடிந்ததை கேள்விப்பட்ட அழகர் கோபம் கொண்டு மதுரை செல்லாமலேயே அழகர் மலை திரும்பினார் என்று இரண்டு விதத்தில் புராணங்களில் கூறப்படுகிறது.

## அழகர் வருகை விபரம்

சித்ரா பௌர்ணமிக்கு நான்கு நாள் முன்னதாகச் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடுகிறது. முதல் இரண்டு நாட்கள் கோயிலில் இருப்பார் அழகர். மூன்றாம் நாள் மாலை மதுரையை நோக்கிப் புறப்படுகிறார். கள்ளர் கொண்டை, கொண்டையில்குத் தீட்டி, கையில் வலை தடி (பூமராங்), இடுப்பில்ஜமதாடு (ஒருவகை கத்தி) என விதவிதமான ஆயுதங்களுடன் மதுரை நோக்கிப் புறப்படுகிறார் கள்ளழகர்.

## ஜமீன் காவல்!

கள்ளழகரின் பாதுகாவலராக வெள்ளியங் குன்றம் ஜமீன்தார் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றுவரை அந்த ஜமீன் வாரிசுகள்தான் கள்ளழகருக்குப் பாதுகாப்பு.

அக்காலத்தில் அழகருக்குப் பாதுகாவலாக சாரட் வண்டியில் அழகரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டே இருப்பார் ஜமீன். அழகர் மீண்டும் அழகர் மலை வரும் பத்து நாட்களும் அவர் அழகருடன் இருப்பார். இப்போதும் அதே வழக்கம் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

- பச்சைப்பட்டு கட்டி வந்தால் நாடு செழிப்பாக இருக்கும்.
- சிவப்புப் பட்டு கட்டிவந்தால் போதிய விளைச்சலு மிருக்காது. நாட்டில் அமைதியும் இருக்காது.
- வெள்ளை மற்றும் ஊதாப்பட்டு கட்டி வந்தால் நாடு இடைப்பட்ட நிலையில் இருக்கும்.
- மஞ்சள்பட்டு கட்டிவந்தால், அந்த வருடத்தில் மங்களகர நிகழ்வுகள் நடக்கும்.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம் ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK




எங்களிடம் ஒரிஜனல் (பர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.


S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/C
SAK திருமண ஹால்


A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,
9842868256

